# றுவன்வெல்ல பிரதேச சபை

## கேகாலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 25 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூலி 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா. 270,087,813 ஆயினும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு மீதி ரூபா.269,212,752 வாக இருப்பதனால் ரூபா.875,061 வினால் வேறுபடுகின்றது.

(ஆ) நடை முறை வருடத்தில் ஆதன வரிக்குரிய குற்றப் பணம் ரூபா. 173,095 அபராதம் மற்றும் உத்தரவாதக் கட்டணத்தின் கிழ் கணக்கீடு செய்யாது ஆதன வரிக் கணக்கிலன் கீழே கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆதன வரி அப்பெறுமதியினால் அதிகரித்தும் அபராதம் மற்றும் உத்தரவாதக் கட்டணம் அப்பெறுமதியினால் குறைந்தும் காணப்படுகின்றது.

(எ) பொருட்கள் இருப்பு கணக்கொடுப்பு அறிக்கையின் படி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்படாத 05 டிரெலர் ,02 டிரெக்டர் கம்பெக்டர் டிரெலர் மற்றும் கெப் வாகனம், வாகனம் மற்றும் இயந்திர உபகரணக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வெவ்வேறு அமைச்சினதும் மற்றும் திணைக்களங்களினதும் ஒதிக்கீட்டின் கீழ் முடிவுற்ற வேலைகள் தொடர்பாக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா. 53,560,648 கடன்பட்டோர், கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஒதிக்கீடு செய்யப்படாததனால் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் அப் பெறுமதியினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கான ரூபா.1,083,550 கொடுப்பணவு 2017 ஆம் வருடத்திற்குரிய செலவாக காட்டப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டின் செலவு அப் பெறுமதியினால் குறைந்து காணப்பட்டது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 09 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 133,438,822 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 150,242,890 ஆனமையால் ரூபா. 16,804,068 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.3.3 <u>தொங்கல் கணக்கு</u>

2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு தொங்கல் கணக்கு செலவு மீதியான ரூபா.18,981 வினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 <u>பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 01 வருடத்திற்கும் மேலாக இருந்து வரும் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளின் கூட்டுமொத்த மீதி முறையாக ரூபா.4,490,150 மற்றும் ரூபா. 8,887,837 ஆகும்.

1.3.5 <u>கணக்காய்வு தொடர்பாக தேவையான எழுத்து மூலமான சாட்சி இல்லாமை</u>

05 கணக்கு விடயம் தொடர்பாக கூட்டுமொத்தம் ரூபா. 162,628,789 விற்குரிய உப அட்டவணைகள் நிதிக் கூற்றுடன் சமர்க்கப்படவில்லை.

1.4 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை</u>

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவு | 04 வருடத்திற்கு மேலாக ஆதன வரி செலுத்தாது இருந்த சொத்துரிமையாளரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா. 114,993 ஆதன வரி அறவிடுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நி.பி.371 | 2010 வருடம் முதல் 2016 வரை 41 முறை வழங்கப்பட்ட முற்பணம் ரூபா.2,954,085 வினை 2017 மே 17 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி.387 | அரச நிறுவனங்களினால் வங்கிக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையின் போது மேலதிகப்பற்று பெற்றுக் கொள்ள முடியாதிருப்பினும் மீளாய்வாண்டில் 02 நடைமுறைக் கணக்குகளில் மிகைப்பற்று மீதிகள் இருந்தது. |
| (iii) நி.பி.396 (ஏ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா.42,611 கூட்டுத்தொகையான 12 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(iv) நி.பி. 1646 — சபையின் 25 வாகனம் தொடர்பாக நாளாந்த வாகனங்கள் செலுத்தும் குறிப்புப் புத்தகம் கணக்காய்வுக்கு முன்வைக்கவில்லை.

(எ) 2009 ஏப்ரல் 17 ஆம் திகதி 1597/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி — சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரிவில் 02 தொலைத் தொடர்புக் கோபுரங்கள் தொடர்பாக ரூபா. 48,000 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 24,849,459 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 6,928,231 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 17,921,228 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 17,921,228 தொகை அதிகரிப்பதற்கு 06 வருமான விடயங்களில் அதிகரிப்பும் 05 செலவின விடயங்களில் வீழ்சியும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

2016.12.31 இல் நிலுவை

| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 2,625 | 1,478 | 2,094 | 1,359 | 1,147 | 735 | 1,182 |
| ii | வாடகை | 3,153 | 1,321 | 7,222 | 4,425 | 1,832 | 2,796 | 4,628 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 79 | - | 307 | 307 | 79 | - | 79 |
| iv | ஏனைய வருமானம் | - | - | 3,594 | - | - | - | - |
| | மொத்தம் | 5,857 | 2,799 | 13,217 | 6,091 | 3,058 | 3,531 | 5,889 |

0
1
1.01
2016.0

மேற்குறிப்பிட்ட நிலுவை வருமான அறிக்கை இறுதிக் கணக்குகளுடன் ஒப்பிடும் போது 03 வருமான பிரிவுகளின் பட்டியிடப்பட்ட (பில்) வருமானம் ரூபா.7,930,000 வினால் வேறுபட்டதை அவதானிக்க முடிந்ததுடன் 04 வருமான பிரிவுகளின் ரூபா. 34,521,000 நிலுவை வருமானங்களில் வேறுபட்டதும் அவதானிக்கப்பட்டது.

## 2.3.2 குத்தகை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) பொது வியாபாரச் சந்தையில் இறைச்சிக்கடை மற்றும் மீன் கடை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகை ஒப்பந்தம் செய்யாததுடன் செய்யப்பட்ட ஒப்பந்தப் பிரகாரம் மாதாந்தம் வாடகை அறவிடாததனால் ரூபா. 972,809 நிலுவை காணப்பட்டதுடன் நிலுவைக்கு

பொறுப்பானவர்களைக் கண்டறிந்து முறையான நடவடிக்கை மேற்கொள்ளத் தவறியது மற்றுமின்றி நிலுவைக்குரிய 15 குத்தகை ஒப்பந்த கோவைகளை சமர்ப்பிப்பதற்கும் சபை தவறியது.

(ஆ) மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2009/01 இலக்க சுற்று நிரூபத்தின் 1.11 பந்தியின் பிரகாரம் இடைக்கால குத்தகை வழங்க முடியுமாக இருந்தும் நீண்ட காலமாக இடைக்கால குத்தகைக்கு வழங்கப்பட்ட 28 கடைகள் தொடர்பாக முறையாக கையளிப்பு நடவடிக்கை மேற்கொள்ளாததுடன் 12 கடைகள் தொடர்பாக அமைச்சரின் அனுமதி பெறப்பட்டிருக்கவுமில்லை.

(எ) வருடாந்தம் வியாபாரங்கள் தொடர்பாக தகவல்கள் சேகரித்து வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரிக்குட்பட்ட இடங்களைக் கண்டறிந்து வரி அறவிட வேண்டியிருந்தும் அவ்வாறான ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2015 ஆம் வருடத்தில் 786 வியாபார நிலையங்களிலிருந்து வரி பெறப்பட்டிருந்ததுடன் 2016 ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு 289 வியாபார நிலையங்களிலிருந்து மாத்திரம் வரி அறவிடப்பட்டிருந்தது. வரி செலுத்தாத நிலையங்களை கண்டறிந்து வரி அறவிடுவதற்கோ சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவோ தவறியிருந்தது.

(ஏ) 2016 வருடம் தொடர்பாக முன்மொழியப்பட்ட வியாபார வரி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2016 ஜனவரி 08 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலின் iv (ஆ) பகுதியில் பிரசரிக்கப்பட்டவாறு சபையின் அதிகார எல்லைகுள் 2016 ஆம் வருடம் நடாத்திச் செல்லப்படுகின்ற எந்தவெரு வியாபாரம் தொடர்பாகவும் 2015 ஆம் வருடம் உழைக்கப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் 2016 க்குரிய வியாபார வரி தீர்மானிக்க வேண்டியிருந்தும் அதற்கு மாற்றமாக வரி அறவிடப்பட்டிருந்தது.

(இ) சபையின் அதிகார எல்லைகுள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சுவரொட்டி, கட்அவுட், பதாகைகள் எண்ணிக்கை தொடர்பாக சபை அறிந்திருக்காததுடன் 53 விசாலமான நிரந்தர விளம்பரப் பலகைகள் தொடர்பாக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்திறன்

வெவ்வேறு விடயங்கள் தொடர்பாக நிறுவனங்களினால் பெறப்பட்ட ரூபா. 2,503,306 குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 09 பதவிகள் தொடர்பாக 11 ஊழியர்களின் வெற்றிடங்களும் 07 பதவிகள் தொடர்பாக 31 ஊழியர்களின் உபரியும் காணப்பட்டது. தொழிலாளர் தொடர்பாக அனுமதிக்கப்பட்டதைவிட 06 தொழிலாளர் மேலதிகமாக இருக்கும் போது ஒப்பந்த அடிப்படையில் 16 தொழிலாளர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வூதியம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற 06 ஊழியர்களிடமிருந்து மிக நீண்ட காலமாக அறவிட வேண்டிய ரூபா. 378,583 வினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

2013 ஆம் வருடம் தொகுதியாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 12 ஏக்கர் 03 ரூட் 10 பேர்ச்சஸ் காணியின் பொது வசதிகள் தொடர்பாக பெற வேண்டிய நூற்றுக்கு 10 வீதம் காணியினைவிட 02 ரூட் 12.04 பேர்ச்சஸ் குறைவான அளவில் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே 2010 ஆம் வருடம் 07 ஏக்கர் 3.5 பேர்ச்சஸ் காணியினை தொகுதியாக்கி விற்பனை செய்யும் விற்பனையாளருடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாததுடன். நூற்றுக்கு 10 வீதம் பொது வசதிகள் தொடர்பாக பெறப்படவேண்டிய காணியினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொன்றிருக்கவில்லை.

3.4 விளைவற்ற / குறைவாகப்பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) கிரயம் ரூபா.5,250,000 பெறுமதியான 03 டிரக்டர் பழுதுபார்க்காது 2014 வருடத்திலிருந்து பயன்படுத்தப்படாதிருந்தது.

(ii) ரூபா.904,174 பெறுமதியான வாகனம் மற்றும் இயந்திரம், பெறுமதி குறிப்பிடப்படாத கெப் வாகனம் மற்றும் டிரெலர் பல வருடங்களாக பயன்படுத்தாது வைக்கப்பட்டுள்ளது.

(iii) ரூபா.485,458 பெறுமதியான நகர்த்தக் கூடிய மேடை மற்றும் கருவிகள் றுவன்வல்ல பொது மைதானத்தின் 02 திறந்த வெளியில் முறையற்று குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த மேடை 01 1/2 வருடமாக பயன்படுத்தப்படாதிருந்தது.

(iv) நீண்ட காலமாக இருந்து வரும் 02 செயற்படாத வங்கி கணக்கு மிகைப்பற்று மீதி முறையாக ரூபா. 1,140 மற்றும் ரூபா.3,133 ஆகும்.

## 3.5 <u>கண்டறியப்பட்ட நட்டம்</u>

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 31 இன் படி நடவடிக்கை மேற்கொள்ளாததன் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா.4,645 பெறுமதியான காசேலை இரண்டு கொடுப்பனவுக்கு மறுக்கப்பட்டதால் சபைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.6 <u>திண்மக் கழிவு முகாமைத்துவம்.</u>

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிளிசரு திட்டத்தின் கீழ் ரூபா.18,089,500 செலவு செய்து இதல்பொல திண்மக் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையம் 2014 வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த மத்திய நிலையம் உக்கக் கூடிய கழிவுகள் தயாரிக்கும் நிலையமாக இருப்பினும் உக்காத கழிவுகள் அதன் அருகில் குவித்து வைத்திருப்பதனால் ஈக்கள் பொருகி அப்பகுதி மக்களுக்கு நோய்கள் பரவுவதனால் பொது மக்களின் ஆட்சேபனை காரணமாக மத்திய நிலையம் மூடப்பட்டிருப்பதுடன் அது இன்று வரை நடைமுறைப்படுத்த முடியாதிருக்கின்றது. இந்த திட்டம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சில பரிந்துரைகள் முன் வைத்திருப்பதுடன் இந்த அதிகார சபையின் அதிகாரியின் பங்களிப்பினையும் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவித்திருந்தும் அந்த பரிந்துரைகளை நடை முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த வேலைத்திட்டம் நடை முறைப்படுத்தப்படாததனால் நாளாந்தம் சேருகின்ற கழிவுகள் ஒழுங்கற்ற முறையில் தனியாருக்குரிய காணிகளில் போடப்பட்டிருந்தது. 2016 வருடத்தில் கழிவு முகாமை வேலைத்திட்டம் தொடர்பாக ரூபா. 7,892,000 செலவு செய்திருந்ததுடன் கழிவுகளை

அகற்றும் நடவடிக்கைகளுக்காக ரூபா. 6,546,000 செலவு செய்யப்பட்டுமிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுமையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 எப்ரல் 25 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்ட பாதீட்டில் செலவுவிடயங்கள் 37 தொடர்பாக மொத்தம் ரூபா.27,395,000 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவுவிடயங்கள் 17 தொடர்பாக ரூபா.2,906,367 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 80 இருந்து 99 வரை பயன்படுத்தப்பட்டிருக்கலில்லை.

### 4.3 வருடாந்த பொருட்கள் இருப்பு கணிப்பீடு செய்தல்

காரியாலத்திலும் மற்றும் பிரிமிக்ஸ் வேலைத்திட்டத்திலும் ரூபா. 8,250 இருப்புப் பொருள் மற்றும் 04 நூலகத்தின் ரூபா. 5,855 பத்தகங்கள் குறைவாகவும் காணப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | அவதானிக்க வேண்டிய விடயம் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) வெவ் வேறு வைப்புக்கள், கடை வாடகை,ஊழியர் கடன் முற்பணப் பதிவேடு புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (iii) கடன்பட்டோர் கடன் கொடுத்தோர் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| | (iv) தொங்கல் கணக்கில் மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (i) நிலையான (தை11 சொத்துப் பதிவேடு | |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) இறைச்சிக் கடை மற்றும் மீன் கடை தொடர்பாக ஒப்பந்தம் செய்யப்பட்ருக்கவில்லை. |
| | (iv) குத்தகை வாடகை 05 வருடத்திற்கு ஒரு முறை மறுசீரமைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (v) வருடாந்த ஆய்வுகள் மூலம் அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரி அறவிட வேண்டிய நிலையங்களை கண்டறியப்படாதது. |
| | (vi) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள விளம்பரங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளாதது. |
| (எ) வாகன நிர்வாகம் | (i) நாளாந்த செலுத்தும் பதிவுப் புத்தகம் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஏ) நிதிக் கட்டுபபாடு | (i) நிதிகூற்றுக்கள் குறிப்பிட்ட திகதியில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | (ii) தொங்கல் கணக்கைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளதது. |
| | (iii) மேலதிகப்பற்று வசதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |
| | (iv) காலம் கடந்த காசோலை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | செலவு ஒதிக்கீடுகளில் கவனத்திற் கொள்ளக் கூடியளவில் மிகுதியாக இருந்தது. |